பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.லிட்.

மலர்: 15] சென்னை: மார்கழி 7 (22—12—67) வெள்ளி ★ வெளியூர்: மார்கழி 8 (23—12—67) சனி [இதழ்: 159

பிரிவினைக்கு வித்திடும் வடவருக்குப் புத்தி புகட்டுவோம்

பெரியாரும் இராஜாஜியும் இணைந்து இந்தி ஏகாதிபத்திய உணர்ச்சியை அடக்கவேண்டும்

தமிழிசைச் சங்க வெள்ளி விழாவில் அறிஞர் அண்ணா வேண்டுகோள்

இந்தி வெறியர்களுக்கு இராஜாஜி அறிவுரை

சென்னை, டிச. 21—

"மொழிப் பிரச்சினையைச் சரியான முறையில் தீர்த்து வைக்காததால் மத்திய அரசு, பிரிவினைக்கு வித்திடும் குற்றவாளியாகிறது! இந்தியாவைப் பிளந்துவிடக் கூடிய அவர்களின் செயலைத் தடுத்து நிறுத்துவதற்கு இராஜாஜியும்—பெரியாரும் இணைந்து பணியாற்ற வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று மாலை, அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற தமிழிசைச் சங்க வெள்ளி விழாவுக்குத் தலைமை வகித்து அண்ணா அவர்கள் உரையாற்றினார்கள்.

இந்த விழாவை இராஜாஜி அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் கலந்துகொண்டு வெள்ளி விழா மலரை வெளியிட்டார்கள்.

விழாத் துவக்கத்தில் திரு. டி. எம். நாராயணசாமி (பிள்ளை) அனைவரையும் வரவேற்றார்.

கிருபானந்தவாரியாருக்கு 'இசைப் பேரறிஞர்' என்ற பட்டத்தை அண்ணா அவர்கள் வழங்கி உரையாற்றினார்கள்.

இராஜாஜி

விழாவைத் துவக்கிவைத்த இராஜாஜி, "'இந்திதான் ஆட்சி மொழி; ஆங்கிலத்தை விட்டுவிடுங்கள்' என்றால், அது ஒருகாலும் நடக்காது" என்றார்; அவர் மேலும் கூறியதாவது:—

"இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆங்கிலம்தான் வேண்டும்; ஆகவே, 'இந்தியைப் பற்றி அரசியல் சட்டத்தில் உள்ளதை நாம் தள்ளிவிட வேண்டும்.

எல்லா மொழிகளும் நல்ல மொழிகளே; ஆனால், பெரும்பான்மை மைனாரிடியினர் பேசுகிறார்கள் என்று—அகம்பாவத்தினால்–நம்மீது அதைச் சுமத்த நாம் அனுமதிக்க முடியாது."

சர்தார் வல்லபாய் படேல், ஆட்சிமொழி விஷயத்தில் ஆங்கிலத்திற்கு எப்படி உரிய இடம் கொடுத்தாரோ அதே நிலைமைதான் நீடிக்கவேண்டும்; ஆகையால், இந்திச் சட்டத்திற்கு நாம் ஒத்துழைப்புத் தரக்கூடாது.

'25 ரூபாய் கொடுத்தால் தமிழர்கள் இந்தி படிப்பார்கள்' என்று அகம்பாவத்தோடு பேசியிருக்கிறார்கள்! அந்த மாதிரி ஒருகாலும் நடககாது!

தமிழகத்தில் இவர்களை (அண்ணாவைச் சுட்டிக்காட்டி) அசைக்க யாராலும் முடியாது! எனவே, மொழி பற்றிய நம்முடைய கட்சியைப் பலமாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் எப்படித் தமிழ் மொழியைப் பாராட்டுகிறோமோ அப்படியே தமிழ் நாகரிகத்தையும் போற்ற வேண்டும்; அதுதான் நம் சிறப்பு!

"அவர்கள் செய்ததுபோல் நாமும் செய்யவில்லை என்றால், நம் கட்சியைப் பற்றி நாம் அக்கறைப்படவில்லை என்று அவர்கள் நினைத்துவிடுவார்கள் என்பதற்காக இப்படியெல்லாம் செய்கிறார்கள்; அந்தமாதிரி செய்ய வேண்டாம்" என்று முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்; நானும் அதையே கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் என்றால் 'அமுது' என்று சொல்வதைப்போல், 'தமிழர்கள் நாகரிகம் அடைந்தவர்கள்' என்பதை நாம் காட்ட வேண்டும். நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்பதில் சந்தேகம் இல்லை!"

அறிஞர் அண்ணா

அண்ணா அவர்கள் தமது உரையில் கூறியதாவது:—

"இராஜாஜி அவர்கள் ஒரு பத்தாண்டுக் காலம் வட நாட்டில் இருந்துகொண்டு அவர்களுக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

முன்னாள் அமைச்சரின் ஒரு நாள் இரவு...!

பதவியும் காலமும் போதிக்கும் பாடம்!

வங்காள மாநிலத்தின் முன்னாள் ஐக்கிய முன்னணி அமைச்சர் தியோ பிரகாஷ், கடந்த 20-ந்தேதி இரவுப் பொழுதின் பெரும் பகுதியினை, பாதையோரத்தில் கழித்திருக்கிறார்!

அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் அரசினர் விட்டு வசதி—கல்கத்தாவைப் பொறுத்தவரையில்—'இராஜபவன'த்து மாளிகைக்குள்ளேயே இருக்கிறது!

நேற்று முன்தினம் இரவு, வெளியே விருந்தொன்றுக்குச் சென்றுவிட்டு, 11-மணியளவில் திரும்பிய அவரை, 'இராஜபவன'த்தின் முன்வாசல் காவல்காரர்கள் தடுத்து நிறுத்தி, உள்ளே நுழைவதற்கு அனுமதி மறுத்திருக்கிறார்கள்!

'இராஜபவனத்து அதிகாரிகள் கட்டளை' என்ற ஒரே பதில்தான் காவல்காரர்களிடமிருந்து வெளிப்பட்டது!

வேறெதற்கும் வழியில்லாத முன்னாள் அமைச்சர், விடியற்காலை 2-30 மணி வரையில், அருகே வீதியோரத்தில்—நடைபாதையில் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்திருக்கிறார்!

"என்னை அவர்களுக்கு நன்கு தெரியும்; நான் இன்னும் அரசினர் மாளிகையிலேயே தங்கியிருப்பதையும் அவர்கள் அறிந்ததுதான்" என அந்த முன்னாள் அமைச்சர், வாயிற் காவலர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

"சரி; பாதையோரத்தில் படுக்க வேண்டியதுதான்" எனத் தீர்மானித்தபோது, இராஜபவனத்து காவல் அதிகாரிகள் சிலர் திடீரென அவரிடம் வந்து, "நீங்கள் உள்ளே போகலாம்; 'அடையாள—அனுமதி' போன்ற எதுவும் தேவையில்லை" என்று கூறியதுடன், நடந்துவிட்ட நிகழ்ச்சிக்காக மன்னிப்பும் கேட்டிருக்கிறார்கள்!

அதற்கும் சற்று நேரத்திற்கு முன்னர்தான், அந்த முன்னாள் அமைச்சரின் வீட்டுப் பணியாள் மேலதிகாரிகளைச் சென்று பார்த்து நிலைமையைக் கூறி, தனது எசமானரை உள்ளே அழைத்துக் கொள்வதில் தோற்றுத் திரும்பியிருந்தார்!

"கோஷ் அமைச்சரவையிடமிருந்து வேறெந்த உபசாரத்தைப் பெறமுடியும்?" எனக் கூறியிருக்கிறார் —'ஒரு நாள் இரவு' அனுபவித்த முன்னாள் அமைச்சர்!

மொழிப் பிரச்சினையில் காங்கிரசாரிடையே மோதல்!

அவையை விட்டு ஒருவர் வெளியேறினார்

மொழிப் பிரச்சினையில், நாடாளுமன்ற மேலவையில் இரு காங்கிரசு உறுப்பினர்கள் மோதிக் கொண்டார்கள்.

இந்தித் திணிப்பு மசோதா அவையில் விவாதிக்கப்பட்டபோது, ஆந்திராவைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர் திருமதி யசோதா ரெட்டியும்—இந்தி வெறியர் சீலபத்திர யாஜியும் கடுமையாகச் சாடிக்கொண்டனர்!

"இந்த ஆட்சி மொழித் திருத்த மசோதாவும் அதையொட்டிய தீர்மானமும்தான் இந்திய ஒற்றுமையின் முடிவைத் தொடங்கிவைக்கின்றன"

என்று திருமதி யசோதா ரெட்டி குறிப்பிட்டபோது, சீலபத்திர யாஜி ஆத்திரமாக எழுந்து, 'நீ யார் அதைச் சொல்ல?' என்று உரத்த குரலில் கேட்டார்.

உடனே திருமதி ரெட்டி,

"நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்; நீர் யார்—என் பேச்சில் குறுக்கிட?"

என்று கேட்டார்.

உடனே மன்றத்தின் பல மூலைகளிலிருந்தும் பலவகைக் குரல்கள் எழுந்தன!

அப்போது காங்கிரசுக் கட்சிக் கொறடா ஓம் மேத்தா, யாஜிக்கு அருகில் அமர்ந்துகொண்டு அவரிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். பிறகு யாஜி, அவையிலிருந்து வெளியேறினார்!

வேற்றிருதய மனிதர் விஷின்ஸ்கி இறந்தார்

கேப்டவுன், டிச. 20—

உலகில் முதன்முதலாக வேறொருவரின் இருதயம் பொருத்தப்பட்ட தென் ஆப்பிரிக்கரான விஷின்ஸ்கி, இன்று காலை மரணமடைந்தார்.

உலக மருத்துவத்துறையிலேயே பெரும் புரட்சியையும் சாதனையையும் ஏற்படுத்தி, விஷின்ஸ்கிக்கு அளிக்கப்பட்ட அறுவைச் சிகிச்சை, தற்காலிகமாக தோற்றிருக்கிறது!

அவருக்கு மாற்று இருதயம் பொருத்திச் சிகிச்சை செய்த டாக்டர் பெர்னார்டு என்பவர், இருதய அறுவைச் சிகிச்சையின் முன்னோடியாக இன்று கருதப்படுகிறார்.

செவ்வாய்க் கிரகத்தில் முதலில் மனிதனை அனுப்பும் சாதனையைவிட, டாக்டர் பெர்னார்டின் மருத்துவச் சாதனை பெருமை வாய்ந்ததாகச் சிறப்பிக்கப்பட்டது.

"மாற்று இருதயம் பொருத்தப்பட்ட விஷின்ஸ்கி, 15 நாட்கள் நல்ல முறையில் வாழ்ந்ததே அந்தத் துறைக்கு ஏற்பட்ட வெற்றி" என, மருத்துவ உலகம் கருதுகிறது.

காதில் விழுந்தது!

"பக்தவத்சலத்தைப் பார்த்தீர்களா?"

"ஏன்—அவருக்கு என்ன?"

"பத்திரிகைத்துறை மொழியில் கேட்டேன்; நீங்கள், கேள்விக்கு அப்படியே அர்த்தம் கொண்டு விட்டீர்கள் போலிருக்கிறது! பக்தவத்சலம், இலட்சுமிபுரம் இளைஞர் சங்கக் கூட்டத்தில் நேற்று பேசியிருப்பதைத்தான், 'பார்த்தீர்களா' என்று கேட்டேன்!"

"ஆமாம்; 'அரசியலில் கொடுக்கலும் வாங்கலும் (Give and Take) என்ற தத்துவத்தைச் சொல்லியிருக்கிறார்!"

"இது 1967-க்குப் பின்னர்தான் கண்டுபிடிக்கப்பட்டதா?"

"இல்லையே; எப்போதும் உண்டு. விட்டுக்கொடுத்து—அனுசரித்து நடந்துகொள்ளும் முறைக்கு இப்படிப் பெயர் சொல்லி அழைப்பார்கள்!"

"அதை ஏன் இப்போது வந்து நினைத்துக்கொண்டார் திடீரென்று?"

"முன்பு, சொன்னால் நடந்து காட்டவேண்டிய நிலையில் இருந்தார்; எனவே, சொல்லாமலே இருந்தார்; இப்போது செயலில் காட்ட வேண்டிய அவசியமில்லாத இடத்துக்கு வந்திருக்கிறார்; எனவே இப்போது, 'சொல்லுவதால் என்ன நஷ்டம் வந்துவிடப்போகிறது' என எண்ணி உபதேசம் மட்டும் செய்கிறார்!"

"வேடிக்கை! இதைக் கேட்டதும், இதே அடிப்படையில் அமைந்த வேறொரு பழமொழி என் நினைவுக்கு வருகிறது."

"என்ன அது?"

"'உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன தருகிறாய்? எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டுவருவாய்?' என்றானாம் ஒருவன்! அதாவது, வாங்கும் நிலையிலே இருக்க விரும்பியவன்!"

"ஆமாம்; இந்தப் பழமொழியில்கூட பக்தவத்சலம் கூறிய தத்துவம் இருக்கிறது; ஆனால், 'ஒரு வழிப் பாதை' போன்ற நடைமுறை! பக்தவத்சலம் இந்த இரண்டு வகைகளில், எந்தக் கொடுக்கல் - வாங்கலை விரும்பியிருக்கிறாரோ தெரியவில்லை!"

உள்ளதைச் சொல்லியதால் உள்ளம் வெகுண்டவர்!

கட்சிக்காரரிடம் கோபித்துக்கொண்ட காங்கிரசுக்காரர்!

நாடாளுமன்ற மேலவையில், நேற்று ஆட்சி மொழித் திருத்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின்போது நிகழ்ந்த விந்தைச் சம்பவம் இது:—

பி. என். சாப்ரு என்ற காங்கிரசுக்காரரின் நேர்மையான பேச்சைக் கேட்டுக் கோபம் கொண்டுவிட்ட பி. கே. பி. சின்கா என்னும் மற்றொரு காங்கிரசு உறுப்பினர், 'மசோதாவின்மீது பேசமாட்டேன்' எனப் பிடிவாதம் தெரிவித்திருக்கிறார்!

அவையின் துணைத் தலைவர் அக்பர் அலிகான் வேண்டி அழைத்தும்கூட, சின்காவின் சினம் தணியவில்லை!

"இந்திக்காகப் பரிந்து பேசினால், 'குறுகிய புத்தி' எனத் தூற்றுவதா?" எனக் கேட்டு அவர், கோபமும் கொண்டிருக்கிறார்!

இந்திவெறியர்களின் கைப்பாவை மத்திய அரசு!

அரசியல் சட்டத்தைத் திரும்பப் பெறுவதற்குப் போராட்டமே நடத்தவேண்டி இருக்கும்!

செய்ததை நினைத்து இந்திராவும் சவானும் வருந்தும் காலம் தொலைவில் இல்லை!

நாடாளுமன்ற மேலவையில் இந்தி எதிர்ப்புக் குரல்

நாடாளுமன்ற மக்களவையில் நிறைவேறிவிட்ட இந்தித் திணிப்பு மசோதா, நாடாளுமன்ற மேலவையில் விவாதத்திற்கு வந்தபோது, தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர்களான டி. செங்கல்வராயனும், ஆர். டி. பார்த்தசாரதியும் தமிழக மக்களின் உணர்ச்சிக்கு எதிராக, 'நாங்கள் இந்தி வெறியர்களின் அடிமைகள்' என்று காட்டிக்கொள்ளும் வகையில் கோழைத்தனமாகப் பேசி இருக்கிறார்கள்.

ஆனல், ஆந்திரத்தைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர் திருமதி யசோதா ரெட்டி, தமிழக சுதந்தரக் கட்சி உறுப்பினர் எஸ். எஸ். மாரிசாமி போன்றோர், மனச்சான்றுக்கு மதிப்பளித்து, மசோதாவை எதிர்த்துத் திட்டவட்டமாகத் தங்கள் கருத்துக்களை அறிவித்திருக்கிறார்கள்.

செதல்வாட்

"இந்தியை ஆதரிப்போர், 'அரசியல் நிர்ணய சபையில் இந்தியை ஆட்சிமொழியாக்க முடிவுசெய்யப்பட்டது, குறைந்த அளவு பெரும்பான்மையுடன் தான்' என்பதை மறந்துவிடுகிறார்கள்......

["ஒரே ஒரு வாக்கு வித்தியாசந்தான்" என்று குரல் கொடுத்தார் ஓர் உறுப்பினர்[

"ஆங்கிலம் நீடிப்பதைச் சில அரசியல் கட்சிகள் எதிர்ப்பது கண்டு வருந்துகிறேன். கிழக்கே இருக்கிற வங்காளியையும்—தெற்கே இருக்கிற தமிழரையும் ஈர்த்துப் பிணைத்து, 'இந்தியர்' என்ற எண்ணத்தை உண்டாக்கியதே ஆங்கிலம்தான்!

விஞ்ஞான—தொழில் நுணுக்க அறிவினைப் பெறவும், பிற வேலைகளுக்கும் நாம் இன்னம் நீண்ட நெடுங்காலம் ஆங்கிலத்தை வைத்துக்கொண்டிருக்க வேண்டும். (பாராட்டுக் குரல்கள்)

இந்தியை நான் எதிர்க்கவில்லை; 'இந்தியை ஏற்றுக்கொள்ளும் நிலை இன்னம் வரவில்லை' என்று சில மாநிலங்கள் சொல்லும்போது, ஆத்திரப்படுவதில் பொருள் இல்லை.

நாம் சனநாயக அமைப்பில் உள்ளதை மறந்துவிடவும் கூடாது. அனைவருடைய ஒத்துழைப்பும், ஒருமித்த எண்ணமும் இருந்தால் தான் நாம் முன்னேற முடியும்.

பல மொழிகள் பேசும் நாட்டில், இந்தி பேசும் மொழிக் குழு பெரும்பான்மையோடு இருந்தாலும், அதற்காக, விரும்பாதவர் மீது அதைத் திணிப்பதில் அர்த்தமே இல்லை!"

எம். சி. சக்ளா

"இந்திக்கும்—ஆங்கிலத்துக்கும் இடையே மோதலை உண்டாக்கி அதனையே தெற்கு—வடக்குப் பிரச்சினையாக ஆக்கிவிடக் கூடாது!

நாட்டின் ஒற்றுமைதான் நமக்கு முக்கியம்; அதை விடுத்து, 'இந்திக்குத்தான் முதலிடம்' என்பது தவறு."

மேலும் அவர், 1947-ல் ஏற்பட்ட பிரிவினையைச் சுட்டிக்காட்டி, 'நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கும் எந்த முயற்சியிலும் ஈடுபடக் கூடாது' என்றுஎச்சரித்தார் அவர்.

"தமிழகமும் நாகாலாந்தும் இந்தியாவின் அங்கங்கள்! 'நம்மிடம் பெரும்பான்மை இருக்கிறது—நிறைவேற்றுவோம்' என்று நினைப்பதே தவறு! சமூகம்—பொருளாதாரம்—அர அரசியல் ஆகிய எல்லாப் பிரச்சினைகளிலும் சிறுபான்மையினரின் ஒத்துழைப்போடு செயல்படுவதுதான் சனநாயகத்தின் தன்மை!

'இரு மொழித் தன்மை' என்கிற போது, 'இந்தி இந்தியா'—'ஆங்கில இந்தியா' என்று முடிவு செய்துகொள்வது தவறு; 'இரண்டு மொழிகளும் ஆட்சி மொழிகளாக ஒரே நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்' என்பதே பொருள்!"

மேலும் அவர், கனடா, சுவிட்சர்லாந்து போன்ற இரு ஆட்சி மொழிகள் உடைய நாடுகளைச் சுட்டிக்காட்டி உரையாற்றினர்.

எஸ். எஸ். மாரிசாமி

"இந்த மசோதா சமரச முயற்சியும் ஆகாது: மொழிப் பிரச்சினைக்கும் தீர்வும் ஆகாது! இது யாரையும் திருப்திப்படுத்தவில்லை! காங்கிரசுத் தலைவர் காமராசரே, 'இந்த மசோதாவில் திருத்தங்கள் ஏதும் செய்யக்கூடாது' என்று கருதுகிறார். ஆனல் நிஜலிங்கப்பாவைத் தலைவராகக் காங்கிரசுக் கட்சி தேர்ந்தெடுப்பதற்குமுன் இந்தக் கருத்தை அவர் சொல்லி இருக்கவேண்டும்.

டில்லியில் மொழி மசோதா விவாதிக்கப்பட்டபோது—இந்திக்காரர்கள் அதைத் திருத்த வேண்டுமென்று நெருக்கிக்கொண்டிருந்தபோது—சென்னையில் உட்கார்ந்து இவர் என்ன செய்துகொண்டிருந்தார்?

வெறியர்களான சில இந்திக்காரர்களின் கைப்பாவையாக மத்திய அரசு ஆகிவிட்டிருக்கிறது! தலைமை அமைச்சரும், உள்துறை அமைச்சரும் தாங்கள் செய்ததை நினைத்து வருந்தும் காலம் தொலைவில் இல்லை!

இந்தி பேசாத மக்களுக்கு எதிராக நிலையான பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது என்று நான் நிச்சயம் கருதுகிறேன். ஒற்றுமை குலைய இருக்கிறது என்பதும் நிச்சயம்!

தென்னக மக்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்படும் வகையில் அரசியல் சட்டம் பொருள் கொள்ளப்படுமானல், அந்த அரசியல் சட்டத்தைத் திரும்பப் பெற நாங்கள் போராட்டம் நடத்த வேண்டியிருக்கும்."

ஒன்பது கோடி ரூபாய் செலவுக்குப் பின்னல் இந்தி வளர்ந்திருக்கும் இலட்சணத்தை விளக்கிய அவர்,

"இந்த ஒன்பது கோடி ரூபாயை எங்கள் தமிழுக்குச் செலவிட்டிருந்தால் நாங்கள் அற்புதங்கள் நிகழ்த்திபிருப்போம்" என்றார்.

யசோதா ரெட்டி(காங்)

தென்னக மக்களுக்கு இந்த மசோதா மூலம் நிலையாக இழைக்கப்பட்ட அநீதியை அவர் தெளிவாக எடுத்துரைத்தார்.

தாய்மொழியோடு ஆங்கிலமும் படித்தாக வேண்டிய கட்டாயம் இந்தி பேசாத மக்களுக்கு இருக்கிறபோது, இந்தி பேசுவோர் இந்தி மட்டுமே படித்தால் போதும் என்ற நிலை இருப்பதை அவர் கண்டித்தார். தென்னக மக்களின்மீது இந்தி திணிக்கப்படுவதை அவர் வேதனையோடு கண்டித்தார்.

பதவி உயர்வுக்கு இந்தி அறிவு கட்டாயம் என்று இருக்கும் வஞ்சகத் திட்டத்தை அவர் வன்மையாகச் சாடினர்.

'தென்னகத்தையும் வட நாட்டையும் இணைக்கும் ஒரே வழி ஆங்கிலத்தை நீடிப்பது மட்டும்தான்' என்று அவர்.

மசோதாவுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் தீர்மானத்தின் போலித் தன்மையை விளக்கிய திருமதி யசோதா ரெட்டி, அதை மசோதாவிலிருந்து நீக்கிவிடுமாறு வற்புறுத்தினர்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்திக்காரர்கள், இந்தி—இந்து—இந்தியா மூன்றையும் ஒரே நோக்கோடு பார்க்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், இந்தி—இந்து—இந்தியா மூன்றும் ஒரு பொருட் சொற்கள்!

150 ஆண்டுகளுக்குப் பிறகும் 2 சதவீதம் பேர் மட்டுமே ஆங்கிலம் படித்திருக்கிறார்கள் என்கிறபோது, 15 ஆண்டுகளில் இந்திய மக்கள் அனைவருக்கும் இந்தி தெரிந்திருக்க வேண்டுமென்று இந்திக்காரர்கள் எப்படி எதிர்பார்க்கிறார்கள்?

'இந்திதான் ஆட்சிமொழி ஆக வேண்டும்' என்று முடிவெடுக்கப்பட்ட பிறகு இந்தப் பதினேழு ஆண்டுகளில் எந்த இந்தி மாநிலமாவது ஒரு தென்னிந்திய மொழியைக் கட்டாயமாக்கி இருக்கிறதா?

ஆனல் இப்போது, அரசியல் பிரசாரத்துக்காக, 'நாங்கள் தமிழோ, தெலுங்கோ படிக்கத் தயாராக இருக்கிறோம்' என்கிறார்கள்!

இந்திக்காரருக்கு ஆங்கிலம் அந்நிய மொழி என்றல், இந்தி பேசாதோருக்கும் ஆங்கிலம் அந்நிய மொழிதான்! எனவே, அனைவருக்கும் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட சமத்துவம் வழங்கும் ஒரே வழி, ஆங்கிலம்தான்!

ஆனல் இப்போது இந்த மசோதா—தீர்மானம் ஆகியவற்றின் மூலம், இந்தி பேசாத மக்களை மூன்று மொழிகள் படிக்கும்படி இந்தி வெறியர்கள் கட்டாயப்படுத்துகிறார்கள்; ஆனல் இந்திக்காரர்களோ, தங்கள் தாய்மொழி இந்தியை மட்டுமே படித்தால் போதும் என்கிற நிலை உள்ளது.

இந்த மசோதாவும்—தீர்மானமும, நேருவும் சாஸ்திரியும் வழங்கிய வாக்குறுதிகளைக் கேலிக்கூத்தாக்கிவிட்டன!"

அரசியலில் ஒரு பூகம்பம் ஏற்பட வழி வகுக்காதீர்!

ஆட்சி மொழி மசோதாவில் நேருவின் உறுதிமொழி எங்கே?

சட்டம் அறிந்த அமைச்சர் கூறும் சமாதானம் ஏற்கக்கூடியதா?

மக்களவையில் கிருஷ்ணமூர்த்தி எச்சரிக்கை

மக்களவையில் ஆட்சிமொழி மசோதாவுக்கு தி.மு.க. சார்பில் திருத்தம் கோண்டுவந்து வே. கிருஷ்ணமூர்த்தி ஆற்றிய உரையின் முழு விவரம் வருமாறு:—

"இந்த மசோதா, இந்தி பேசாத மாநில மக்களைத் திருப்தி செய்யவில்லை என்பதுடன், 'பண்டித நேருவின் உறுதிமொழிகளை முழு அளவில் நிறைவு செய்ய வேண்டும்' என்ற நோக்கத்துடன் உள்துறை அமைச்சரால் இம்மன்றத்தில் கொண்டுவரப்பட்ட இம் மசோதா, 'அந்த உறுதிமொழிகளைக் கொண்டிருக்கவில்லை' என்ற என் திருத்தத்தை முன்மொழிந்து நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1963-ம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டத்தைக் காட்டிலும் இம்மசோதாவில் யாதொரு நற்பயனும் காணப்படவில்லை.

என்னுடைய திருத்தத்தை முன்மொழிகின்ற இந்த நேரத்தில், 'பண்டித நேரு அவர்களின் உறுதிமொழிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை' என்பதையும் எடுத்துச்சொல்ல நான் விரும்புகிறேன்.

1965-ம் ஆண்டில், சென்னையில் பலமுறை துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றன; மக்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டார்கள்; ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டார்கள்!

அரசியல் சட்டத்தில் உள்ள ஆட்சிமொழிப் பிரிவைத் தீயிட்டுக் கொளுத்தியதற்காக நாங்களெல்லாம் கைதுசெய்யப்பட்டுக் காவலில் இருந்ததை நீங்கள் நினைத்துப் பாருங்கள்.

அந்த நேரத்தில் மறைந்த சாஸ்திரியும், இப்போதுள்ள தலைமையமைச்சரும், 'அரசியல் சட்டத்தைத் திருத்துகிறோம்; பண்டித நேருவின் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறோம்' என்றெல்லாம உறுதிமொழியளித்தார்கள்.

"பொதுத் தேர்தலுக்குப் பின்னல் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகள் மாறுபட்டிருப்பதால், நேருவின் வாககுறுதிகளை முழு அளவில் அமுல்செய்ய அரசியல் சட்டத் திருத்தம் கொண்டுவர என்னல் இயலவில்லை" என்று அண்மையில் நடைபெற்ற தேர்தலுக்குப் பின் எங்கள் முதலமைச்சர் சந்தித்தபோது இந்தியத் தலைமையமைச்சர் சொன்னர்.

அரசியல் சட்டத் திருத்தம்மூலம் பண்டித நேருவின் வாககுறுதிகளை நிறைவேற்றத் தலைமையமைச்சரால் முடியவில்லை என்றலும், 'மே' என்றிருப்பது, 'ஷெல்' என்று ஏன் மாற்றப்படவில்லை என்பது எனக்குப் பெருவியப்பைத் தருகிறது!

மத்திய அரசின் எல்லா நடவடிக்கைகளிலும், நாடாளுமன்ற நடவடிக்கைகளிலும், 'இந்தியுடன் ஆங்கிலமும் நீடிக்கும்' என்று 1963-ம் ஆண்டு சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த அவையின்முன் உள்ள இந்த மசோதாவிலும், முன்பிருந்த நிலைதான் தொடருகிறது.

நாடாளுமன்ற நடவடிக்கைகளில், 'மே' தொடருகிறது; மத்திய அரசில் எல்லா நடவடிக்கைகளிலும் ஆங்கிலம் பயன்படுத்துவதற்கும், 'மே'தான் தொடருகிறது.

இந்தியாவின் ஐவர் ஜென்னிங்ஸ் ஆன நம்முடைய சட்ட அமைச்சரை, 'மே' என்பதற்குப் பதில் 'ஷெல்' என்று ஏன் போடக்கூடாது—என்று கேட்டதற்கு, "இம்மசோதாவின் பல பகுதிகளில் 'ஷெல்' போடப்பட்டிருப்பதால், இங்கு 'ஷெல்' போடுவதில் பொருளில்லை" என்று சொல்லி விட்டார். அவர் ஒரு வழக்கறிஞர். இந்த அவையைக குழப்புவதில் மிகவும் ஆசைப்படுபவா!

துண்டு விளக்கங்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை; 'மே'-க்குப் பதில, 'ஷெல்' போட்டால் துண்டு விளக்கத்திற்கே அவசியமில்லை!

நாம் துண்டு விளக்கங்களைப் பற்றிக் கவலைப்படவில்லை; நம்முடைய கவலையெல்லாம் இந்தியோடு ஆங்கிலமும் பயன்படுத்த 'ஷெல்' போடவேண்டும் என்பதுதான்.

ஜனசங்க, சம்யுக்த சோஷலிஸ்டு உறுப்பினர்களை நான் புரிந்துகொள்ள முடிகிறது; அவர்களெல்லாம் இதனை எங்களோடு ஒப்புக்கொள்கிறார்கள்.

'இந்தி பேசாத மாநிலத்தில் இந்தியைப் புகுத்தக்கூடாது' என்றும், 'இந்தி பேசும் பகுதிகளில்—அதாவது, அவர்கள்மீது ஆங்கிலம் புகுத்தக்கூடாது' என்றும்தான் அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் ஒரு சமரச உடன்பாட்டிற்கு வருகின்றனர்.

இரண்டு ஆட்சிமொழிகள் இருக்கட்டும்; இரண்டு இணைப்பு மொழிகள் இருக்கட்டும்; அவை ஆங்கிலமாக—இந்தியாக எப்போதும் இருக்கட்டும்.

இந்தியை எங்கள்மீதும், ஆங்கிலத்தை அவர்கள் மீதும் திணிக்க வேண்டாம்.

பண்டித நேருவின் உறுதிமொழிகளை முழு அளவில் அவர்கள் நிறைவேற்றவில்லை என்று நான் இந்த அரசாங்கத்தை—அமைசசரவையைக் குற்றஞ் சாட்டுகிறேன்.

நான் ஆங்கிலத்தில் பேசுகிறேன்; இந்தி எனக்குத் தெரியாத காரணத்தினல் நான், ஆங்கிலத்தில் பேசவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறேன்; அதனல், நான் ஆங்கிலத்தின்—ஆங்கிலேயர்களின் 'ஆதரவாளன்' என்றே, 'அடிமை' என்றே, பொருளாகாது!

என்னுடைய தாய்மொழி இங்கு அங்கீகரிக்கப்படாத காரணத்தினல், நான் இங்கு ஆங்கிலத்தில் பேசுகிறேன்.

என்னுடைய தாய்மொழியில் இங்கு பேசினல், மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கேட்டுப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் வசதிகள் இங்கு ஏதுமில்லை. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமானல் நாங்கள் ஆங்கிலத்தில் பேசாமல், தமிழில்தான் பேசுவோம்.

நான் இன்னொரு விஷயத்தைத் தெளிவாகக விரும்புகிறேன். இந்த அரசு, தான் கொடுத்த வாக்குறுதிகளைச் சரிவர அமுல் செய்யவில்லை

இன்று இம்மசோதா நிறைவேற்றப்படலாம். இது ஒரு மசோதா தான்; நாளை இது நிறைவேற்றப்பட முடியாததாகிவிடலாம்.

ஆனல், அரசியல் சட்டத் திருத்தம செய்யப்படுமானல், அவ்வளவு எளிதில் பாராளுமன்றம் உடனடியாக அதை மாற்றிவிட முடியாது; ஏனெனில், அதற்கு மாநிலங்களின் ஒப்புதல் தேவைப்படும்.

(3-ம் பக்கம் பார்க்க)

எங்களைக் குடிமக்களாகவே கருதவில்லையா?

தமிழ்க் குடிமகனுக்குக் குடியரசுத் தலைவரே இந்தியில் பதில் எழுதுவதா?

அரசியல் சட்டத்தையும் மதிக்காமல் இந்தி எண்களைத் திணிப்பதேன்?

நாடாளுமன்றத்தில் அன்பழகன் கண்டனக் குரல்

நாடாளுமன்ற மக்களவையில் தி.மு.க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், ஆட்சி மொழித் திருத்த மசோதாவின்மீது நடந்த விவாதத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளியாகியுள்ளது; பிற்பகுதி வருமாறு:—

தமிழகத்தில் போராட்டத்திற்குக் காரணமாக அமைந்தது!

20—8—1963-ம் நாள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பாபநாசத்தில் உள்ள தி. மு. க. உறுப்பினர் ஒருவருக்கு எழுதப்பட்டதாகும் இந்தக் கடிதம்; இந்தக் கடிதத்தை, திரு. வாஜ்பாயி அவர்களின் துணையைக் கொண்டுதான், இதிலுள்ளவைகளை நான் புரிந்துகொண்டேன்; ஏனெனில், இதில் உள்ள எண்கள்கூட இந்தியில்தான் எழுதப்பட்டிருக்கிறது.

அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச எண்கள், அக்கடிதத்தில் இல்லை. இதில் எழுதப்பட்ட இந்தி எண்கள், அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்படவில்லை; ஆனால் இக்கடிதத்தில் அதற்கு ஒரு இடம் காணப்படுகிறது! அதுவும் இந்தியக் குடியரசுத் தலைவரின் அலுவலகத்திலிருந்து தமிழ்நாட்டில் உள்ள ஒருவருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் காணப்படுகிறது.

அவர், ஆங்கிலத்தில்தான் கடிதம் எழுதினர்; ஆனல் பதில் முழுவதும் இந்தியில்தான் இருந்தது.

அரசின் இதுபோன்ற அன்றைய பழக்கம்தான், 1965-ம் ஆண்டு தமிழகத்தில் போராட்டத்திற்குக் காரணமாக இருந்தது.

தலைவர்களின் அரசியல் வாழ்வைப் பற்றி மாணவர்கள் கவலைப்படவில்லை; நாட்டின் குடிமகனாக இருக்கும் அவர்களுடைய சொந்த வாழ்க்கைப்பற்றியே கவலைப்பட்டனர். அத்தகைய கவலைக்குப் போதுமான காரணங்கள் இருந்தன.

எங்களுடைய 'விதி' இது?

வாஜ்பாயி போன்ற சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர்கள், 'இங்குகூட போராட்டத்தைப் பார்க்கிறீர்கள்' என்று சொல்லலாம். ஆனல், கிளர்ச்சி இரு வகைப்படும்; ஒன்று—மற்றவர்களை அச்சுறுத்துவது; இன்னொன்று—தங்களைத் தாங்களே வருத்திக் கொள்வது!

தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்கு இத்தகைய நிலையைச் சகிக்க முடியவில்லை என்றபோது, தங்கள் உடலிலே பெட்ரோல் ஊற்றி தங்களைத் தாங்களே தீயிட்டுக் கொண்டனர்! அது எங்களுடைய விதி என்று நினைக்கிறேன்! ஆனல், அதுபோன்ற நிகழ்ச்சிகள் எங்கும் நடைபெறக் கூடாது!

இந்தித் திணிப்பினை அவர்களால் சகிக்கமுடியவில்லை என்றபோது, இத்தகைய நிலையில் அவர்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்தினர்!

அதற்குப் பின்னும், கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை!

இப்போது, இன்னும் ஒரு மசோதாவைக் கொண்டுவருகிறீர்கள்; அதுவும் இந்தி பேசாத மாநில மக்களைத் திருப்தி செய்ய கொண்டுவருகிறீர்கள்; 'இந்திதான் வாழவேண்டும்' என்று சொல்லும் இந்தி பேசும் மக்களை திருப்தி செய்யும் வகையில், சில திருத்தங்களைச் செய்திருக்கிறீர்கள்!

இந்த அச்சுறுத்தல் எங்களுக்கு தேவைதானு?

நாட்டில் உள்ள அத்தனை மக்களுக்கும் சம உரிமை இருப்பது போல் நாட்டிலுள்ள எல்லா மொழிகளையும் நீங்கள் அங்கீகரிக்க வேண்டும்.

'இந்தி பரவவேண்டும்' என்று விருப்பமுடைய ஒருவரால் எழுதப்பட்ட துண்டு பிரசுரம் என்னுடைய கையில் இருக்கிறது; 'நாட்டில் முழு உரிமை பெற்ற குடிமகனாக எல்லா மக்களும் இந்தியை மட்டும் படிக்கவேண்டும்' என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தன்னுடைய பிள்ளைகளுக்கு இந்தியின் மூலம் படிப்புச் சொல்லிக் கொடுக்காதவர்களுக்கு இது ஓர் எச்சரிக்கையாகும். அப்படிப்பட்டவர்கள், குடிமகனுக்குரிய முழு உரிமையை இழந்துவிடுவர்!

இது எதைக் காட்டுகிறது? இந்த அச்சுறுத்தல் எங்களை இரண்டாந்தரக் குடிமகனுகின்ற நிலைக்குத்தான் இழுத்துச் செல்லும்! இது தேவைதானு?

திருப்தி எப்படி ஏற்படும்?

'எந்த வகையிலேனும் நாட்டின் ஒருமைப்பாடு காப்பாற்றப்பட வேண்டும்' என்று நீங்கள் விரும்பினல், இந்தி பேசாத மாநில மக்களின் நியாயமான கோரிக்கையான—நேரு, சாஸ்திரி வாக்குறுதிகள் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு இணங்க வேண்டும்.

அவர்களுடைய வாக்குறுதிகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமானல், ஆட்சிமொழிச் சட்டம் குறித்து அரசியல் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர முடியவில்லை என்றல், 'இப்பிரச்சினையில் தீர்வு காண வேண்டும்' என்று உண்மையாக நினைப்பீர்களானல், இம்மசோதாவைச் சிதைக்காமல் முன்மொழியப்பட்ட நிலையிலேயே நிறைவேற்றினல்கூட எங்களுக்குக் கொஞ்சம் திருப்திகரமாக இருக்கும்.

இம்மசோதா நிறைவேற்றப்படாமல்— ஆங்கிலத்தின்மீது தவருன எண்ணம்கொண்டு—ஆங்கிலத்தை அகற்றிவிட்டு—தகுதி பெருத நிலையிலேயே இந்தி, ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிக்கவேண்டும் என்று நினைப்பீர்களானல், இந்தி பேசாத மாநில மக்கள் ஒருபோதும் திருப்தியடைய மாட்டார்கள்!

நாடாளுமன்ற நடவடிக்கையின் போது இம்மன்றத்தின்முன் அரசாங்கத்தினல்கொடுக்கப்பட்ட வாககுறுதிகளைக் காப்பாற்றுவதன்மூலம், 'தங்களுடைய உரிமைகள் கட்டுப்படுத்தப்படவில்லை' என்ற எண்ணத்தை இந்தி பேசாத மாநில மக்களிடையே உருவாக்க வேண்டும்; அதன்பின்னர்தான் மக்கள் திருப்தியடைவார்கள்!

அந்நிய மொழியல்ல அது!

ஆங்கில மொழி பற்றி பண்டித நேரு கொடுத்த வாக்குறுதியை மறுபடியும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்—

"ஆங்கிலோ—இந்தியர்களின் தாய்மொழி ஆங்கிலம் தான் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதற்காக நாம் மொழிப் பிரிவில் அதனைச் சேர்க்கவேண்டிய அவசியமில்லை.

"ஆங்கிலோ—இந்தியர்களின் தாய்மொழி ஆங்கிலம்தான்; மற்ற மொழிக்காரர்களைப்போல் அவர்களுக்கு நாட்டில் சம உரிமை உண்டு; அந்த வகையில்தான் நாம் ஆங்கிலத்தைக் கருத வேண்டும் என்று அவர் உறுதியளித்தார்.

ஆனல் ஆங்கிலத்தை அரசியல் சட்ட எட்டாவது பிரிவில் சேர்க்க அவர் மறுத்துவிட்டார். இது ஒரு வாதமே ஆகும்.

எட்டாவது பிரிவு என்பது தான் என்ன? அது ஆங்கிலத்தில்தான் எழுதப்பட்டிருக்கிறது; அரசியல் அமைப்புச் சட்டமே ஆங்கிலத்தில்தான் எழுதப்பட்டது; ஆங்கிலம் மூலம் தான் அது நிறைவேற்றப்பட்டது; அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை; அதற்காக நாம் வருந்தலாம்.

தமிழிலும், இந்தியிலும் நாம் அச்சட்டத்தை மொழிபெயர்த்திருக்கலாம்; அது அதிகாரபூர்மமான மொழிபெயர்ப்பு என்று சவாண் அவர்கள் சொல்லலாம்.

நான், மொழிபெயர்க்கப்பட்ட அரசியல் சட்டத்தை ஒப்புக்கொள்கிறேன்; நீதிமன்ற நடவடிக்கைகள் அதிகாரபூர்வமாக ஆங்கிலத்தில்தான் நடைபெறுகின்றன; ஆகையினல் எட்டாவது பிரிவில் நீங்கள் ஆங்கிலத்தைச் சேர்க்கவில்லையென்றலும், அங்கு ஆங்கிலம்தான் இருக்கிறது; உணர்ச்சியில் அது இந்தியினைப் பிரதிபலித்தாலும், அதனுடைய அமைப்பு ஆங்கிலத்தில்தான் இருக்கிறது; ஆகையால், ஆங்கிலம் அந்நிய நாட்டு மொழியல்ல!

ஆனல் நான் தமிழுக்காகத்தான் வாதாடுகிறேன்; இந்தியோடு தமிழும் ஆட்சி மொழியாகநீங்கள் ஏற்றுக்கொண்டு அத்தகைய காலம்வரும்வரை முன்பிருந்த நிலையிலே ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டும்.

இந்தியைத் தீவிரமாக அரசு நடவடிக்கைகளில் புகுத்துவது, நாட்டிற்கு ஆபத்தையே விளைவிக்கும்! மக்கள் சாமர்த்தியசாலிகளாக இருந்தால்—அதிகாரத்தில் உள்ளவர்கள் அவர்களுடைய மன நிலையை அறிந்தால்—இந்தியைத் தங்கள் விருப்பப்படி திணிக்க மாட்டார்கள்!

இன்னும் சில காலத்திற்கு இந்தியை ஆதரிக்கலாம்—வளர்க்கலாம்; அதுவரை ஒரே ஆட்சி மொழியாக ஆங்கிலம்தான் இருக்கவேண்டும்.

எங்களுடைய மொழிகள் எல்லாம் இந்திய யூனியன் ஆட்சி மொழியாக ஒப்புக்கொள்ளப்படும் வரையில் ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்க வேண்டும்."

அரசியலில் ஒரு பூகம்பம் ஏற்பட....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"இந்த அரசும் தலைமையமைச்சரும், உள்துறை அமைச்சரும் நேருவின் வாக்குறுதிகளை நிறைவேற்றவுமில்லை; அவற்றை சரிவரப் பின்பற்றவும் இல்லை" என்று நான் அவர்களைக் குற்றஞ்சாட்டுகிறேன்.

அவர்கள், மொழிப் பிரிவில், 'மே'க்குப் பதில், 'ஷெல்' சேர்க்கவில்லை!

நாங்கள் அரசியல் சட்டத் திருத்தம் ஒன்றையே விரும்புகிரேம். இந்த மசோதாவினல் நாங்கள் திருப்தியடையவில்லை; எங்களுக்குத் தேவை அரசியல் சட்டத் திருத்தம் தான்!

மகாராட்டிரத்தில் பூகம்பம் ஏற்பட்டதை நீங்கள் கண்டீர்கள். இங்கு இன்னெரு அரசியல் பூகம்பம் ஏற்பட வேண்டுமென நான் விரும்பவில்லை; நாம் அது தேவை என்றும் விரும்பவில்லை.

"எங்களையும் மனதில் கொண்டு செயல்படுங்கள்" என்று காங்கிரசு உறுப்பினர்களையும், நண்பர்களையும் வேண்டிக்கொள்கிறேன். எதையும் முழுவதுமாக நாங்கள் ஏற்றுக்கொள்வதற்குமுன் எங்களுக்குக் கொஞ்சம் காலம் கொடுங்கள்!

அரசியல் சட்டம் உருவாக்கப்படுவதற்குமுன் நாடாளுமன்ற நடவடிக்கைகளிலும், மத்திய அரசின் எல்லா நடவடிக்கைகளிலும் ஆங்கிலம் பயன்படுத்தப்படவேண்டும்; அதுவும், 'இந்தி பேசாத மாநில மக்கள் விரும்புகின்றவரையில்' என்ற பகுதிதான் எங்களுக்குத் தேவை.

அப்படிப்பட்ட பிரிவு மசோதாவில் சேர்க்கப்படுமானல், நேருவின் உறுதிமொழிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

இதைத் தவிர வேறு எவ்வகையான மசோதாவும் எங்களைத் திருப்திபடுத்தாது.

நான் மீண்டும் வேண்டிக்கொள்கிறேன்—தயவுசெய்து மீண்டும் சிந்தித்துப் பாருங்கள்!

நீங்கள் அரசியல் சட்டத்தைத் திருத்தத்தான் போகிறீர்கள்! அதற்கான காலம் வரத்தான் போகிறது!

இந்தி பேசாத மாநில மக்களை—தி. மு. கழகத்தினரைக் கலந்தாலோசிக்காமல், சட்டத் திருத்தம் கொண்டுவரத்தான் போகிறீர்கள்!

இந்தி பேசாத மாநிலத்தில் உள்ள பொதுமக்கள்—மாணவர்கள்—படித்தவர்கள், மத்திய அரசை எதிர்த்து நேருவின் வாக்குறுதிகளை அரசியல் சட்டத்தின்மூலம் நிறைவேற்றப்படாததற்குக் கிளர்ந்தெழப் போகிருர்கள்! அப்போது மசோதா அளவிலாவது நீங்கள் நிறைவேற்றத்தான் போகிறீர்கள்!"

பீகார் அரசு ஊழியர்களின் பொறுப்பற்ற போக்கு!

தன்பாத், டிச. 21—

"பீகார் அரசுத் தலைமைச் செயலகத்தில் உள்ள ஊழியர்களில் பாதிப் பேர் வேலையே செய்வதில்லை; எஞ்சியவர்களும் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் வேலை செய்வதே அரிதாக இருக்கிறது"

என்று பீகார் மாநில அமைச்சர் ஒருவர் தம்மிடம் தெரிவித்ததாக, சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாச நாராயணன் இங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

"இந்த நிலையில் நிர்வாகம் சீர்குலைவதும் பொதுமக்களுக்குப் பாதகம் ஏற்படுவதும் எதிர்பார்க்கக்கூடியதுதானே" என்ருர்.

'வாய்மையே வெல்லும்'

'தமிழக அரசு செய்தது சரியே'-- மத்திய அமைச்சர் ஒப்புதல்

"தமிழக அரசின் இலச்சினையில், 'சத்தியமேவ ஜெயதே' என்றிருந்த வடமொழித் தொடரை, 'வாய்மையே வெல்லும்' என்று தமிழக அரசு மாற்றிக்கொண்டிருப்பது சட்டப்படி சரியே; மத்திய அரசின் ஆணைக் குறிப்புக்கு அது மாருனது அல்ல"

என்று மத்திய உள்துறைத் துணையமைச்சர் கே. எஸ். இராமசாமி, யக்ஞதத் சர்மா என்ற நாடாளுமன்ற உறுப்பினருக்கு எழுத்து மூலம் அறிவித்திருக்கிருர்.

"மாநில அரசு தனக்கெனத் தனி இலச்சினை வைத்துக் கொள்ளலாம்; தேசிய இலச்சினையை இருக்கின்றபடியோ, சிறு மாறுதல்களுடனே வைத்துக்கொள்ளலாம் என்பதுதான் மத்திய அரசின் ஆணைக் குறிப்பு"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி

சென்னை நகர்—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் திருத்தம் வேண்டுவோரும், பதிவு செய்துகொள்ள வேண்டியவர்களும் 26—12—67 மாலை 3-மணிக்குள், செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளருக்கு விண்ணப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

இந்தி திணிப்பு மசோதா

புதுவை அமைச்சர் கண்டனம்

"தற்போது மக்கள்சபையில் நிறைவேற்றப்பட்ட ஆட்சி மொழி மசோதா நாட்டின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிக்கும்"

என்று, புதுவை மாநிலக் கல்வி அமைச்சர் மாணிக்கவாசக (ரெட்டியார்), செய்தியாளரிடம் கூறினர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்தி பேசும் மக்கள் 'ஆதிக்கம்' செலுத்தவே, இம்மசோதா வழி வகுக்கும்; எனவே, இதன் காரணமாகப் பல இடங்களில் கிளர்ச்சி தோன்றினல் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவில் திருத்தங்கள் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட விதத்திலிருந்து இந்திய மக்களிடையே ஒற்றுமை இன்மையைத்தான் உண்டாகும்."

இரங்கல்

கீழஆம்பூர் தி. மு. க. துணைச் செயலாளர் சு. சுப்பையாவின் தாயார் இயற்கையெய்தியது குறித்துக் கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

புவனகிரி வழக்கறிஞர் ஏ. எல். வைத்திலிங்கம் அவர்களின் அன்னையார் 10—12—67-ல் இயற்கையெய்தியது குறித்துப் புவனகிரி நகர தி. மு. க. சார்பில் ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை 23-வது வட்ட எம். ஜி. ஆர். தமிழ் வளர்ச்சி மன்றச் செயலாளர் எச். எ. கான் அவர்களின் பெண் குழந்தை இயற்கையெய்தியது குறித்து மேற்படி மன்றத்தின் சார்பில் அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

இடைத் தேர்தல் தீர்ப்பு — அறிஞர் அண்ணா விளக்கம்

'தவறான கற்பனை — குறுகிய வாதம் — பரிதாபத்துக்குரிய தோல்வி'

'கழகத்தின்பால் கிராம மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை மேலும் உறுதியாகிறது'

'சங்கரி வெற்றி எங்கள் அவசர-அவசியக் கடமையை ஊக்குவிக்கிறது'

சென்னை, டிச. 21—

" தி. மு. கழகத்தின் செல்வாக்கும், மக்களிடத்தில் கழகத்திற்கு இருக்கிற பிடிப்பும் தேய்ந்து வருகிறது என்று தங்களுக்குத் தாங்களே ஏற்படுத்திக்கொண்ட ஒரு மயக்கத்தில் காங்கிரசுத் தலைவர்கள்—திரு. சி. சுப்பிரமணியம்கூட—இருந்தனர் ; இருந்தும் வருகின்றனர். அந்தக் கருத்தைத் தென் சென்னை பொய்யாக்கியது ! இன்று சங்கரியும் அதனைப் பொய்யாக்கியுள்ளது !

" இன்னொரு தவறான கற்பனையைக் காங்கிரசுத் தலைவர்கள் பிடித்துக் கொண்டுள்ளனர் ; 'கிராமப் பகுதிகள் தி. மு. கழகத்திற்கு எதிராக இருக்கிறது' என்று அவர்கள் சொன்னார்கள் ; இதுவே அவர்களின் ஒரே பல்லவியாக இருந்தது ! 'அவர்களின் வாதம் எவ்வளவு குறுகியது' என்பதனையும், 'அவர்களது கணிப்பு எவ்வளவு பரிதாபத்துக்குரியது' என்பதனையும், கிராமப்புறத்து மக்கள், தி. மு. கழகத்திடம் கொண்டுள்ள நம்பிக்கை எத்துணை உறுதியானது என்பதனையும் சங்கரி காண்பித்துவிட்டது "

என்று, அறிஞர் அண்ணா அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் விளக்கியுள்ளார்கள்.

சங்கரித் தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் சி. வீரமணி 11,554 வாக்குகள் கூடுதலாகப் பெற்று வாகை சூடியதையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் அண்ணா அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது :—

"சங்கரியில் கிடைத்துள்ள வெற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் மக்கள் கொண்டுள்ள நல்லெண்ணத்திற்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாகும்.

"சங்கரி பொதுமக்களின்பால் நான் ஆழ்ந்த நன்றியுடையவனாக இருக்கிறேன்.

"இந்த இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி தன்னிடமிருந்த எல்லாச் சக்தியையும் பயன்படுத்திப் போட்டியிட்டது.

"தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைமைப் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ள திரு. சி. சுப்பிரமணியம், அங்கு, காங்கிரசின் தேர்தல் வேலைகளுக்குப் பொறுப்பேற்றிருந்தார் ; 'கழகத்திடம் பொதுமக்களுக்கு அலுப்பு ஏற்பட்டுவிட்டது' என்றுகூட அவர் தெரிவித்தார் !

"அவரது மதிப்பீடும், அவரது வழிகாட்டுதலும் சீரானவையல்ல என்பதை, தேர்தல் முடிவு எடுத்துக்காட்டிவிட்டது.

"தி. மு. கழக ஆட்சியிடம் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் உறுதிப்பாடும் சிதருமல் வலுவாக இருக்கிறது என்பது, மக்கள், கழகத்தை ஆதரிக்க முன்வந்துள்ளதன் வாயிலாகத் தெளிவாகிறது !

"இதனால் நான் மெத்தனம் அடைந்துவிடவில்லை ; என் முன்னும் என் தோழர்கள் முன்னும் இருக்கிற அவசரக் கடமைகளை இந்த வெற்றி ஊக்குவிக்கிறது ; மக்களின் நிலையை உயர்த்துவது என்கிற அந்தக் கடமையை நிறைவேற்றுவதில் எங்களது முழு முயற்சியினையும் ஈடுபடுத்துவோம்.''

பிரிவினைக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாத் துறைகளிலும் அறிவுரை சொன்னால்தான் இந்தியா ஒன்ருக நிலைத்திருக்கும் !

இன்று நிலைமை மிகவும் மோசமாகி வருகிறது ! வீணன விவாதத்தை ஆரம்பித்து வைத்து நல்ல மனதைத்தக் குழப்பிவிட்டார்கள் ! ஒன்றுபட்ட மக்களைப் பிளவுபடுத்தி எதிர்காலத்தைப் பாழ்படுத்திக் கொள்ளுகிறார்கள் !

இதுதான் இராஜாஜிக்கு உள்ள வருத்தமாகும் ! இதை அவர்கள் உணர்வதாகத் தெரியவில்லை ! இதை உணர்ந்தால், இராஜாஜி இந்தி சம்பந்தமாகப் பேசி வருவதை, 'இந்தி எதிர்ப்பு உணர்ச்சி' என்று கருதாமல், 'நாட்டைக் காப்பாற்றும் முயற்சி' என்று கருதுவார்கள் ! அப்படிக் கருதினால்தான் மொழிப் பிரச்சினைக்குப் பரிகாரம் ஏற்படும் !

எதிலுமே ஒன்று சேரமுடியாத பெரியாரும் இராஜாஜியும், இந்திப் பிரச்சினையில் ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்பதை, வடக்கே உள்ளவர்கள் இராசதந்திரக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்தால், அது அவர்களுக்கு எவ்வளவு ஆபத்து என்பது புரியும்.

மொழிப் பிரச்சினையை நல்ல முறையில் தீர்க்காத காரணத்தினால், இந்தியப் பேரரசை நடத்துகிறவர்கள் பிரிவினை எண்ணத்திற்கு வித்திடுகிறார்கள் !

'இந்தியாவைப் பிளந்துவிடாதீர்கள்' என்று நாம் சொல்ல வேண்டிய நிலை வந்துவிட்டது !

இந்த நிலையில், இராஜாஜிதான் இந்தச் சிக்கலைத் தீர்க்க முடியும் ; இராஜாஜியும்—பெரியாரும் சேர்ந்து பணியாற்ற வேண்டும் ; அப்படிப் பணியாற்றினால், வடக்கேயிருந்து வரும் இந்தி ஏகாதிபத்திய உணர்ச்சி தன்னாலேயே அடங்கும் !''

இந்தி பேசுவோரும் ஆங்கிலம் கற்பராம்

இந்தி பேசாதவர்களுக்கு சவாண் கூறும் சமாதானம்

புதுடில்லி, டிச. 21—

"மத்திய அரசு ஊழியர் தேர்வில், வெற்றிபெற்ற இந்தி பேசாத பகுதியைச் சேர்ந்தவர்கள் வேலையில் சேர்ந்தபிறகு இந்தியில் அலுவல்களைக் கவனிக்கும் அளவுக்குத் தேர்ச்சி பெற வேண்டும் ; அதேபோல், இந்தி பேசும் பகுதியைச் சேர்ந்தவர்கள் வேலையில் சேர்ந்த பிறகு ஆங்கிலத்தில் பணியாற்றக் கூடிய அளவுக்குப் பயிற்சி பெற வேண்டும் ''

என்று, உள்துறை அமைச்சர் ஒய். பி. சவாண், நாடாளுமன்றத்தில், தி.மு.க. குழுத் தலைவர் அன்பழகனிடம் விளக்கமளித்தார்.

மக்களவையில் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட ஆட்சிமொழி மசோதாவினால் இந்தி பேசாத மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதக நிலையை திரு. அன்பழகன் வெளியிட்டபோதே இதனை திரு. சவாண் கூறினர்.

நடக்க இருப்பவை

23--12--67

மதுரை

10-வது வட்டம் எம்.ஜி.ஆர். அறிவொளி மன்ற முதலாண்டு விழா ; மாலை 7 மணிக்கு ஞான ஒளிவுபுரத்தில்; தலைவர்: அ. கருணை; பேசுவோர்: இரா. சனர்த்தனம், எஸ். முத்து எம்.எல்.சி., கு. திருப்பதி பி.ஏ,, பி.எல்., இரா. சு. செல்லம், கூடலரசன், ஆறுமுகம்.

திருப்பூர்

14-வது தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு பன்சிலால் வீதியில்; தலைவர்: மு. இராமசாமி; பேசுவோர்: வெ. கண்ணன், சு.துரைசாமி எம்.எல்.ஏ., வே. சுப்பிரமணியம், இரா. முருகேசன், கே.எஸ். மணி எம்.சி., வி.எஸ். பழனிச்சாமி.

காரைக்குடி

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு முனியாண்டி கோயில் முன்பு; தலைவர்: எஸ். என். இராசு; பேசுவோர்: மு. காதர்சா பி.ஏ., க.வே. விக்கிரமாதித்தராசன், இலட்சுமணன், பாலாமணி, டி.கே.எஸ்- மணி, கே. மணிவெள்ளையப்பன் பி.ஏ., ஆ. வெள்ளமாயன்; அண்ணா படத்திறப்பு; மு. சுப்பிரகணியம். (சிவகங்கை சேதுராசன் குழுவினரின் பலகுரல் கலைநிகழ்ச்சி நடைபெறும்.)

வேலாயுதபாளையம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கலைவாணர் திடலில் ; தலைவர் : பொ. பழனியப்பன் ; பேசுவோர் : க. அன்பரசு, சி. வே. வேலப்பன் எம்.எல்.ஏ., பரமத்தி சண்முகம், வை. இரத்தினவேலு, எஸ். நல்லுசாமி.

24--12--67

திருவில்லிபுத்தூர்

அண்ணா மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு வடக்கு ரத வீதியில் ; தலைவர் : மா. குருசாமி எம்.சி.; பேசுவோர் : ஆ. திராவிடமீணி, ஆர். கே. துரை நாரணன், எஸ். டி. கொழுந்து.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியீடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24- சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) [illegible]

இவர்களும் காங்கிரசுக்காரர்கள்தான் — ஆனால் இந்தி வெறியர்கள் அல்லர்!

'நாடாளுமன்ற மேலவை' என்றும், 'பெரியவர்கள் மன்றம்' எனவும் அழைக்கப்படும் பெயருக்கேற்ப, புதுடில்லி மாநிலங்களவை, கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆட்சிமொழித் திருத்த மசோதா பற்றிய விவாதத்தின்போது — கவனத்தைக் கவரும் வகையில், கட்சி—மொழி—பிரதேச வரம்புகளைக் கடந்த அளவில், நாட்டுக்கு சில நல்ல கருத்துக்களை வழங்கிக்கொண்டிருக்கிறது !

கட்டுப்பாடு—பயம் போன்ற அச்ச உணர்வுகளினால் கட்சிப் பின்னல்களில் அகப்பட்டுக்கொண்டு, 'உள்ளே ஒன்றும் உதட்டில் ஒன்றுமாக' மக்களவையில் பேசிய சில காங்கிரசுக்காரர்களையும், மாநிலங்களவையில் இதயம் திறந்து உரையாற்றியிருக்கும் சில காங்கிரசுக்காரர்களையும் ஒப்பிட்டுக் காட்டும் நோக்கத்துடன் பின்வரும் பகுதிகள் இங்கு தரப்படுகின்றன. (குறிப்பிடப்பட்டிருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் காங்கிரசு உறுப்பினர்களே என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது) :—

பாபுபாய் சினய் :—"இந்திக்குப் பின்னல் இருக்கும் 'கட்டாயப்படுத்தும் போக்கு'தான், அந்த மொழிமீது அளவு கடந்த வெறுப்பு ஏற்படுவதற்குக் காரணமாகும்."

எம். கோவிந்த ரெட்டி :—"ஒரு பகுதி மக்களைத் துன்புறுத்திக்கொண்டு ஒரு மொழியினை உயரிய இடத்துக்குக் கொண்டுவந்துவிட முடியாது. இந்திக்காரர்கள் சிலர் தென்னகத்திற்குச் சென்று பார்த்தால்தான், அங்கே உள்ள மக்களது இந்தி மொழிபற்றிய உணர்வுகளை நேருக்குநேர் உணர்ந்துகொள்ள முடியும் !

"அன்றாடம் மாற்றிக்கொள்ளும் சட்டையைப் போன்றதல்ல மொழி !

"இந்திக்காரர்கள் முயன்றாலும், ஆங்கிலத்தை அவ்வளவு சுலபத்தில் அகற்றிவிட முடியாது !"

டி. பி. முகர்ஜி :—"ஆங்கிலத்தை அகற்றுவதைப் போன்ற தேச விரோதமான காரியம் எதுவும் இருக்க முடியாது !

"தொழில்—விஞ்ஞானக் கல்வியின் சாளரமே ஆங்கில மொழிதான் !

"இந்தியைப் பேசாதவர்கள்மீது—இந்தியை விரும்பாதவர்கள்மீது அதனைக் கட்டாயப்படுத்தித் திணிப்பீர்களானல், பின்னல் நிலைமை, கட்டுக்கடங்காமல் போய்விடும் !"

எம். சி. ஷா :—"இந்தி ஏன் வேண்டாம் என்று தென்னகம் கூறும் காரணங்களுக்கு நாம் சற்று செவி மடுக்க வேண்டும்."

பி. என். சாப்ரு :—"'இந்தியைப்போல் மற்ற மாநில மொழிகளும் சம உரிமை பெற வேண்டும்' என்ற கோரிக்கை நேர்மையானதே !

"ஆங்கிலம் சாதாரண மொழி மட்டுமல்ல ; இந்தியாவின் தொழில் முன்னேற்றத்துக்கும் – கலாச்சார ஒற்றுமைக்கும் ஓர் இன்றியமையாச் சாதனமும்கூட !

"'இந்தி திணிக்கப்படக்கூடாது ; 'இந்திக்காரர்களின் போக்கில் வெறித்தன்மைதான் காணப்படுகிறது' என்ற தமிழகத்தின் குற்றச்சாட்டுக்களை நான் ஆதரிக்கிறேன்.

"இப்போது வந்துள்ள மசோதா, இந்தி மொழி பேசாதவர்களுக்குப் பாதகம்—இந்தி பேசுபவர்களுக்குத்தான் சாதகம் !"

என். ஆர். எம். சாமி :—"ஆங்கிலமும் ஒரு தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

"இந்தி வெறியர்களுக்குத்தான் இந்த மசோதா, மன நிறைவைத் தரும் !"

தியாகராயநகர் பகுதி தோழர்களுக்கு

நிகழவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்புமிக்க ஊர்வலத்தில் வெள்ளை நிற அரைக் கைச் சட்டையுடனும் ஆலிவர் பச்சை நிறமுள்ள அரைக் காலுறையுடனும் ஊர்வலத்தை அழகுபடுத்த விருப்பதால், ஏற்கனவே எடுத்த முடிவுப்படி சொந்தச் செலவில் சீருடையுடன் ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் ஆர்வமிக்க தோழர்கள், தங்கள் பெயர்களை 25—12—67-க்குள் 'அன்பக'த்தில் அல்லது, '17-அ/2, தெற்கு தண்டபாணித் தெரு, தியாகராயநகர், சென்னை—17' என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ளுமாறு தியாகராயநகர் பகுதி சீரணித் தலைவர் கு சுந்தரம் அறிவிக்கிருர்.

குழுக் கூட்டங்கள்

★

சென்னை

"அமைந்தகரை அறிஞர் அண்ணா மன்றப் பொது உறுப்பினர் கூட்டம், 23—12—67 இரவு 9-மணிக்கு, மன்றப் பணிமனையில் நடைபெறும்" என்று மன்றத் தலைவர் வேதகிரி அறிவிக்கிருர்.

திருச்செந்தூர் வட்டம்

"திருச்செந்தூர் வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம், 24—12—67 காலை 11 மணிக்கு, ஆலந்தலை கழகப் பணிமனையில் நடைபெறும்" என்று, வட்டச் செயலாளர் பொ. கண்ணபிரான் அறிவிக்கிருர்.